# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.84/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr.ராஜ்குமார் | Father's Name | : | மெய்ஞானகுரு |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 54 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 07th day of November 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மன்னார்குடியில் தனியார் மருத்துவமனை நடத்தி வருகிறேன். கடந்த 14.05.2009 அன்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, தளிக்கோட்டை காலணி, த/பெ.ராமசாமி மகன் 55 வயது ராஜேந்திரன் என்பவர் சிகிச்சைக்காக அவரது உறவினர் அழைத்துவந்தார். அவரிடம் விசாரித்தபோது 13.05.2009 அன்று இரவு 10.30 மணியளவில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:04 +0530

அவரது ஊரில் நால்ரோடு என்ற இடத்தில் 10 தெரிந்த நபர்களால் கம்பியாலும், அரிவாளாலும் தாக்கியதாக கூறினார். நோயாளியை பரிசோதித்தபோது சுயநினைவுடனும், ரத்த அழுத்தம், நாடி துடிப்பு சீராக இருந்தது. உடலில் ஏற்பட்ட காயங்கள் 1)வலது பக்க நெற்றில் 6x0.5 செமீ x தோல் ஆழத்திற்கு ஒரு வெட்டு காயம் காணப்பட்டது. 2)இடது பக்கவாட்டு பிடரி பகுதியில் 4x0.5 செமீ x தோல் ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. 3)வலது முன்னங்கை பகுதியில் வீக்கமும், எலும்பு முறிந்தும் காணப்பட்டது. 4)இடது முழுங்கை பகுதியில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. நோயாளிக்கு தலை பகுதி, வலது முன் கை பகுதிக்கு நுண்கதிர் எடுத்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2**. அன்றைய தினமே மேற்கொண்ட சம்பவத்தில் ராஜதுரை மகன் மாரிமுத்து என்பவரை உறவினர் மதிவாணன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நோயாளியை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். நோயாளிக்கு நெஞ்சு பகுதி மற்றும் இடுப்பு பகுதியில் வலி இருந்ததாக கூறினார் அவருக்கு நெஞ்சு பகுதியல் நுண்கதிர் படம் எடுத்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3**. மேற்கொண்ட சம்பவத்தில் சுப்பையன் மகன் பிரபாகரன் என்பவரை உறவினர் மதிவாணன் சிகிச்சைக்காக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:11 +0530

அழைத்து வந்தார். நோயாளியை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். இடது முழங்கால் முட்டியில் ரத்த கட்டும், அதனை சுற்றி வீக்கம் காணப்பட்டது. அவருக்கு முழங்கால் முட்டியில் நுண்கதிர் படம் எடுத்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ 4**. மேற்கொண்ட சம்பவத்தில் கலியபெருமாள் மகன் காமராஜ் என்பவரை உறவினர் சிவக்குமார் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நோயாளியை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். இடது புருவத்தின் மேலே 2x0.5 செமீ x தோல் ஆழத்திற்கு சிதைந்த காயம் காணப்பட்டது. அவருக்கு தலையில் நுண்கதிர் படம் எடுத்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ 5**. அன்றைய தினமே ராஜேந்திரன் மகன் வீரமணி என்பவரை அதே சம்பவத்தில் காயம் ஏற்பட்டு ராஜேந்திரன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை பரிசோதித்த போது நோயாளி சுயநினைவுடனும் இரத்த அழுத்தம், நாடி துடிப்பு சீராகவும் இருந்தது. அவரது முகத்தில் வலது பக்க தாடை எலும்பில் வீக்கம் காணப்பட்டது. அவர் வலி இருந்ததாக கூறினார். அவரது தாடை எலும்பை நுண்கதிர் எடுத்து நோயாளியாக அனுமதித்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6**. வெட்டுக்காயங்கள் அருவாளால் ஏற்பட வாய்ப்புண்டு. வீக்கம் மற்றும் கிழிந்த காயங்கள் கட்டை மற்றும் கம்பியால் அடித்தால் ஏற்பட

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:18 +0530

வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர்களுக்கு அவர்கள் சொன்ன நேரத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்கு முன்போ பின்போ ஏற்பட்டிருக்க வாய்புண்டு என்றால் சரி. காயம்பட்ட ராஜேந்திரன், வீரமணி ஆகியோருக்க ஏற்பட்ட காயமானது கரடு முரடான இடத்தில் தவறி கீழே விழும்போது தகரம் போன்ற கூர்மையான பகுதியால் காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி. ஆயுதங்களை காட்டி போலீசார் என்னிடம் விசாரணை செய்யவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.84/2025

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரகாசன் | Father's Name | : | கண்ணுசாமி |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 63 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 07th day of November 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2023 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது திருத்துறைப்பூண்டியில் வசித்து வருகிறேன். 14.05.2009 அன்று வடுவூர் காவல் நிலைய தலைமை காவலராக நிலைய பொறுப்பிலிருந்தபோது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அதிகாலை மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த தளிக்கோட்டை காலணியை சேர்ந்த ராமசாமி மகன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:33 +0530

ராஜேந்திரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.7**. பின்னர் நிலையம் திரும்பி காலை 6.00 மணிக்கு வடுவூர் காவல் நிலைய கு.எண் 115/2009, இதச பிரிவுகள் 147, 148, 323, 324, 435, 307 ன்படி பதியப்பட்ட முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.8**. வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை எனவும் வழக்கிற்கேற்றாற் போல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்திற்கு ஏற்றாற்போல் அ.சா.ஆ.8 பதிவு செய்யப்பட்டது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.07 14:35:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.